[1979 மார்ச் 9

திருச்சி மருத்துவமனை.

*வினா எண் 316 — திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியில் உள்ள அரசு மருத்துவமனையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தற்போது நல்ல வசதிகளுடன் இயங்கி வருவதால் விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

சென்னையில் கொசு ஒழிப்புத் திட்டம்.

*வினா எண் 317 — திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை மாநகராட்சி சுகாதாரப் பிரிவில் கொசு ஒழிப்புத் திட்டத்திற்காக மாலத்தியான் போன்ற மருந்துகள் இப்போது வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(ஆ) 1973-க்குப் பின் 1977-ஆம் ஆண்டுவரை மேற்கண்ட திட்டம் செயல்படாததற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) 1973—77 ஆண்டுகளில் ''மாலத்தியான்'' என்கிற மருந்து இந்திய அரசால் வழங்கப்படாததால், இம்மருந்து உபயோகிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் எம். எல். ஓ., அபேட், பைரோசின் போன்ற மருந்துகள் சென்னை மாநகராட்சியால் கொசு ஒழிப்பு திட்டத்தின் கீழ் உபயோகிக்கப்படுகிறது.

(ஆ) மாலத்தியான் வழங்கப்படாததால் 1973—77-ம் ஆண்டில் சென்னை மாநகராட்சியின் கொசு ஒழிப்புத் திட்டத்தை நடைமுறை செய்வதில் எவ்விதத் தடையும் ஏற்படவில்லை. அத்திட்டங்கள் தொடர்ந்து நடைபெறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.